# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **06/ந/2018**

ஆணை எண். **9/2018**

நாள் : **10/01/2018**

திரு இல. கோபால்,
மேட்டூர் அனை.

– **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி,
சேலம்.

– **எதிர் மனுதாரர்**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை–1, 19/338, பெரியண்ணன் நகர் முகவரியில் வசிக்கும் திரு இல. கோபால் அவர்களின் 30.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 05.01.2018 அன்று பெறப்பட்டு, 006/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை–1, 19/338, பெரியண்ணன் நகர் முகவரியில் வசிக்கும் திரு இல. கோபால் என்பவர் தான் 30.09.2000–இல் வயது முதிர்வு காரணமாக எடப்பாடி நகராட்சியில் மேலாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், எனினும் மேட்டூர் நகராட்சியில் பணியாற்றியபோது மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரர் ஓய்வு பெற்று சுமார் 17 ஆண்டுகள் கடந்து விட்டன. அவர் தற்பொழுது 75 அகவையிதனை எய்தியிருப்பார். இத்தனை ஆண்டுகள் கழித்தும் சேமநல நிதிக்கான வட்டித் தொகை மனுதாரருக்கு வழங்கப்படாதது பாராட்டுக்குரிய செயலாக அமையாது. மேட்டூர் நகராட்சியில் அலுவலர்கள் / துப்புரவுப் பணியாளர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற நபர்களிடமிருந்து இதுபோன்று முறையீடுகள் இம்முறைமன்ற நடுவத்திற்கு வந்த வண்ணம் உள்ளன. எனவே, மேட்டூர் நகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும்

பணியாளர்களது சேமநல நிதிக்கான வட்டித் தொகை மற்றும் பிற இன நிலுவைத் தொகை சம்பந்தப்பட்ட கருத்துருக்களை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொண்டு விதிகளி.படியும் மனிதாபிமான அடிப்படையிலும் உடன் தீர்வு காணப்படவேண்டும் என வலியுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

10/1/18

செயலாளர்.

10.1.18

10/1/18

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   மேட்டூர் நகராட்சி,
   சேலம் மாவட்டம்.

2. திரு இல. கோபால்,
   19/338, பெரியண்ணன் நகர்,
   மேட்டூர் அணை – 1,
   சேலம் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி